**IN THE COURT OF THE SESSIONS JUDGE, FAST TRACK MAHILA COURT, VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR. (CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**Spl. S.C. No. 01 / 2018**
**Dated : 11.07.2018**
**Deposition of witness for : P.W. 1**

| | |
|---|---|
| பெயர் - திருமதி. இளையராணி | ஜாதி : |
| த-பெ - | சமயம் - |
| கிராமம் : | தொழில் - |
| தாலுகா : | வயது - |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

__முதல் விசாரணை -__

நான் தற்போது தென்காசியிலுள்ள சிந்தாமணியில் குடியிருக்கிறேன். தற்போது எனக்கு வயது 19 ஆகிறது. வழக்கு சமயத்தில் இருக்கன்குடியில் என் பெற்றோருடன் குடியிருந்து வந்தேன். என் பெற்றோர்கள் கூலி வேலை செய்கின்றனர். சம்பவ சமயத்தில் நென்மேனியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்தேன். எதிரியை தெரியும். எதிரி சிறு வயதிலிருந்தே என் குடும்பத்திற்கு பழக்கமானவர். எங்கள் ஊருக்கு அடிக்கடி வந்துபோவார். 31.08.2016ம் தேதி சரியாக நான் படிக்காத காரணத்தால் என் அம்மா திட்டியதால் நான் கோபப்பட்டு தென்காசியில் உள்ள என் உறவினர் வீட்டிற்கு சென்று விட்டேன். நான் காணாமல் போய்விட்டேன் என்று என் அம்மா போலீசாரிடம் புகார் கொடுத்திருப்பது தெரிந்து மறு நாள் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. எதிரி என்னை கடத்தி சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை. எதிரி என்னை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை. பாலியல் தாக்குதலும் செய்யவில்லை. எதிரி என்னை திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. என்னுடன் அவர் உடலுறவும்கொள்ளவில்லை. இதற்கு முன்பு விருதுநகர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். அதனை நான் விருப்பப்பட்டு கொடுக்கவில்லை. போலீசார் சொன்னதின் பேரில் தான் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறெதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டார்.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் போலீசாரின் விசாரணையில் கடந்த 31.08.2016ம் தேதி நான் பள்ளிக்கு சென்றுவிட்டு 11.00 மணியளவில் வயிற்றுவலி என்று சொல்லி வந்தபோது எதிரி தன்னை தென்காசிக்கு அழைத்து சென்று அன்றிரவு திருக்குமரன் என்பவர் வீட்டில் தங்க வைத்ததாகவும் மறுநாள் தென்காசி தோரணமலை முருகன் கோவிலில் வைத்து தாலி கட்டியதாகவும் பின்பு தென்காசியில் சிந்தாமணி என்ற ஊருக்கு என்னை தேடி என் தாயார் மற்றும் உறவினர்கள் வந்ததாகவும் போது எனக்கு திருமண வயது வராத காரணத்தால் எதிரியிடமிருந்து என்னை என் தாயார் தன்னுடன் வருமாறு அழைத்ததாகவும் வரமறுத்ததால் நான் எதிரியுடன் சென்றுவிட்டதாகவும் பின்பு மறுநாள் 02.09.2016ம் தேதி என் தாயார் இருக்கன்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பின்பு வழக்கு பதிவு செய்து 10.10.2016ம் தேதி இருக்கன்குடி காவல்ஆய்வாளர் தன்னை எதிரியிடமிருந்து மீட்டுக்கொண்டதாகவும் அந்த சமயத்தில் நான் பெற்றோருடன் போக மறுத்ததால் என்னை விருதுநகர் குழந்தைகள் நல் குழுமத்தில் ஒப்படைத்ததாகவும் பின்பு போலீசார் விசாரித்தபோது எதிரி என்னை ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து தென்காசி திருக்குமரன் வீட்டில் வைத்து கட்டாய உடலுறவு கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி என்னை திருமணம் செய்து கொண்டதால் மேற்படி விபரத்தை மாற்றி பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) - இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**அமர்வு நீதிபதி,**
**விரைவு மகளிர் நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**

**IN THE COURT OF THE SESSIONS JUDGE, FAST TRACK MAHILA COURT,**

**VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**Spl. S.C. No. 01 / 2018**
**Dated : 11.07.2018**
**Deposition of witness for : P.W. 2**

| | |
|---|---|
| பெயர் - திருமதி. அமுதா | ஜாதி : |
| த-பெ - | சமயம் - |
| கிராமம் : | தொழில் - |
| தாலுகா : | வயது - |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**முதல் விசாரணை -**

நான் தற்போது இருக்கன்குடியில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என் மகள். தற்போது என் மகளுக்கு 19 வயதாகிறது. எதிரியை தெரியும். 31.08.2016ம் தேதி என் மகள் வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டார். என் மகள் காணாமல் போய்விட்டதால் நான் இருக்கன்குடி போலீசாரிடம் புகார் கொடுத்தேன். வெள்ளைப் பேப்பரில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆகும். பிறகு மறு நாள் என் மகள் வீட்டிற்கு வந்துவிட்டார். அவரை நான் கேட்டபோது அவர் படிக்காத காரணத்தால் நான் திட்டியதை வைத்து கோபித்து கொண்டு எங்கள் உறவினர் வீட்டிற்கு சென்றுவந்ததாக கூறினார். எதிரிக்கும் என் மகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. எதிரி என் மகளை கடத்தி சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை. எதிரி என் மகளை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை. பாலியல் தாக்குதலும் செய்யவில்லை. எதிரி என் மகளை திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. என் மகளுடன் அவர் உடலுறவும் கொள்ளவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறெதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டார்.)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

நான் போலீசாரின் விசாரணையில் கடந்த 31.08.2016ம் தேதி என் மகள் பள்ளிக்கு சென்றுவிட்டு 11.00 மணியளவில் வயிற்றுவலி என்று சொல்லி வந்தபோது எதிரி அவரை தென்காசிக்கு அழைத்து சென்று அன்றிரவு திருக்குமரன் என்பவர் வீட்டில் தங்க வைத்ததாகவும் மறுநாள் தென்காசி தோரணமலை முருகன் கோவிலில் வைத்து தாலி கட்டியதாகவும் பின்பு தென்காசியில் சிந்தாமணி என்ற ஊருக்கு நான் தேடி சென்றபோது என் மகளுக்கு திருமண வயது வராத காரணத்தால் எதிரியிடமிருந்து நான் என்னுடன் வருமாறு அழைத்ததாகவும் வரமறுத்து பின்பு எதிரியிடன் சென்றுவிட்டதாகவும் பின்பு மறுநாள் 02.09.2016ம் தேதி நான் தாயார் இருக்கன்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பின்பு வழக்கு பதிவு செய்து 10.10.2016ம் தேதி இருக்கன்குடி காவல்ஆய்வாளர் என் மகளை எதிரியிடமிருந்து மீட்டுக்கொண்டதாகவும் அந்த சமயத்தில் என் மகள் என்னுடன் வர மறுத்ததால் என் மகளை விருதுநகர் குழந்தைகள் நல் குழுமத்தில் ஒப்படைத்ததாகவும் பின்பு போலீசார் விசாரித்தபோது எதிரி என் மகளை ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து தென்காசி திருக்குமரன் வீட்டில் வைத்து கட்டாய உடலுறவு கொண்டதாக கூறியுள்ளார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியும் என் மகளும் திருமணம் செய்து கொண்டதால் மேற்படி விபரத்தை மாற்றி பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) - இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**அமர்வு நீதிபதி,**
**விரைவு மகளிர் நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**

**IN THE COURT OF THE SESSIONS JUDGE, FAST TRACK MAHILA COURT, VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**Spl. S.C. No. 01 / 2018**
**Dated : 11.07.2018**
**Deposition of witness for : P.W. 3**

| | |
|---|---|
| பெயர் - திரு . இருளப்பசாமி | ஜாதி : |
| த-பெ - | சமயம் - |
| கிராமம் : | தொழில் - |
| தாலுகா : | வயது - |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

<u>**முதல் விசாரணை -**</u>

நான் தற்போது இருக்கன்குடியில் குடியிருக்கிறேன். அ.சா.1 என் தங்கை. அ.சா.2 என் அம்மா. தற்போது என் தங்கைக்கு 19 வயதாகிறது. எதிரியை தெரியும். 31.08.2016ம் தேதி என் தங்கை வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டார். என் தங்கை காணாமல் போய்விட்டதால் அ.சா.2 இருக்கன்குடி போலீசாரிடம் புகார் கொடுத்தார். பிறகு மறு நாள் என் தங்கை வீட்டிற்கு வந்துவிட்டதாக என் அம்மா கூறினார். எதிரிக்கும் என் தங்கைக்கும் எந்த தொடர்பும் இல்லை. எதிரி என் தங்கையை கடத்தி சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை. எதிரி என் தங்கையை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை. பாலியல் தாக்குதலும் செய்யவில்லை. எதிரி என் தங்கையுடன் திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. என் தங்கையுடன் அவர் உடலுறவும் கொள்ளவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறெதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டார்.)**</u>

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**</u>

நான் போலீசாரின் விசாரணையில் கடந்த 31.08.2016ம் தேதி என் தங்கை பள்ளிக்கு சென்றுவிட்டு 11.00 மணியளவில் வயிற்றுவலி என்று சொல்லி வந்தபோது எதிரி அவரை தென்காசிக்கு அழைத்து சென்று அன்றிரவு திருக்குமரன் என்பவர் வீட்டில் தங்க

வைத்ததாகவும் மறுநாள் தென்காசி தோரணமலை முருகன் கோவிலில் வைத்து தாலி கட்டியதாகவும் பின்பு தென்காசியில் சிந்தாமணி என்ற ஊருக்கு என் அம்மா தேடி சென்றபோது என் தங்கைக்கு திருமண வயது வராத காரணத்தால் எதிரியிடமிருந்து வருமாறு அழைத்ததாகவும் வரமறுத்து பின்பு எதிரியிடன் சென்று விட்டதாகவும் பின்பு மறுநாள் 02.09.2016ம் தேதி என் தாயார் இருக்கன்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பின்பு வழக்கு பதிவு செய்து 10.10.2016ம் தேதி இருக்கன்குடி காவல்ஆய்வாளர் என் தங்கையை எதிரியிடமிருந்து மீட்டுக்கொண்டதாகவும் அந்த சமயத்தில் என் தங்கை என் அம்மாவுடன் வர மறுத்ததால் விருதுநகர் குழந்தைகள் நல குழுமத்தில் ஒப்படைத்ததாகவும் பின்பு போலீசார் விசாரித்தபோது எதிரி என் தங்கையை ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து தென்காசி திருக்குமரன் வீட்டில் வைத்து கட்டாய உடலுறவு கொண்டதாக கூறியுள்ளார் என்று என் தங்கை சொல்லியிருக்கிறார் என்று என் அம்மா என்னிடம் கூறினார் என்றும் என்றால் சரியல்ல. தற்போது எதிரியும் என் தங்கையும் திருமணம் செய்து கொண்டதால் மேற்படி விபரத்தை மாற்றி பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.